From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.7/16

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : மீனாட்சி | Father/Husband Name | : மாரிமுத்து |
| Age | : | Calling | : |
| Date | : 03.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 03 day of 02.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது).**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மதுரை, யாகப்பா நகரில் குடியிருந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். எனது மகன் பிரவின்குமார் மதுரை, வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் படித்து கொண்டு ஆரப்பாளையத்தில் உள்ள ஹோட்டலில் வேலை பார்த்து வந்தார். எனது மகனுடன் சங்கர் என்பவரும் வேலை பார்த்து வந்தார். கடந்த 20.09.2013-ம் தேதி இரவு 9.30 மணியளவில் போலீசார் எனக்கு போன் செய்து எனது மகன் பிரவின்குமாருக்கு மதுரை, உயர்நீதிமன்றம் அருகில் எனது மகன் பேசன் புரோ இருசக்கர வாகனத்தில் சங்கருடன் சென்றுகொண்டிருந்தபோது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், சம்பவ இடத்திலேயே எனது மகன் இறந்துவிட்டதாகவும் என்னிடம் தகவல் சொன்னார்கள். என்னை மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு வரச்சொன்னார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு பின்னர் எனது மகனின் உடலை என்னிடம் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் தான் எனது மகனின் உடலை பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து எந்த இடத்தில் எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.